# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1894/15 - 2014 දෙසැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2014.12.23

*1894/15 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாணத்தின் 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டம்

**அறிவித்தல்**

மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழில் துறை, பொறியியல் சேவைகள், தகவல் மற்றும் வர்த்தக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டத்திற்காக மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரினால் 2014.11.05 ஆந் திகதி அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளபடியால், அந்நியதிச் சட்டம் 2014.11.05 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வர வேண்டும் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழில் துறை, பொறியியல் சேவைகள், தகவல் மற்றும் வர்த்தக அமைச்சர்.

மேல் மாகாண முதலமைச்சு,
சிராவஸ்தி மந்திரய,
கொழும்பு 07,
2014, திசெம்பர் 17.

**மேல் மாகாணத்தின் 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டம்**

2010 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நியதிச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மேல் மாகாண நிதி நியதிச் சட்டத்தை திருத்துவதற்கான நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண, மாகாண சபையால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக :-

1. இந்நியதிச் சட்டம் மேல் மாகாணத்தின் 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நிதி (திருத்தம்) நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன், மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும். *சுருக்கப் பெயரையும் நீண்ட பெயரையும் திருத்துதல்.*

2. பிரதான நியதிச் சட்டத்தின் நீண்ட பெயருக்காக பின்வரும் நீண்ட பெயர் உள்ளடக்கப்பட்டு திருத்தப்படுகின்றது :-

இந்நியதிச் சட்டம், திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம், திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரைக் கட்டணச் சட்டம், திருத்தப்பட்டவாறான கலால் கட்டளைச் சட்டம், திருத்தப்பட்டவாறான 1957 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பரிசுப் போட்டி வரிச் சட்டம், திருத்தப்பட்டவாறான தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், திருத்தப்பட்டவாறான மாநகர சபைக் கட்டளைச் சட்டம், நகர சபை கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் போன்ற சட்டங்களின் சில ஏற்பாடுகளுடன் இயைபற்றதாகும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் XXIX அத்தியாயத்திற்காக புதிய பிரிவைப் பிரதியிடல்.*

3. இங்கு கீழே காட்டப்படும் அத்தியாய இலக்கம், அத்தியாயப் பெயர் மற்றும் பிரிவுகள் முறையே பிரதான நியதிச் சட்டத்தின் 97 ஆவது பிரிவிற்கு அடுத்ததாக உள்ளடக்கப்படுவதுடன் அவை XXIX அ அத்தியாயம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரைக் கட்டணமாக 97 அ மற்றும் 97ஆ பிரிவுகளாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

XXIX அ அத்தியாயம்

**தேசத்தைக் கட்டி எழுப்பும் வரியும் முத்திரைக் கட்டணங்களும்**

*தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி மாகாண நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என்பது.*

97அ 2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்தச் சட்டத்தின்) 10ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக சேகரிக்கப்பட்ட மொத்த நிதியில் 33 1/3 % நிதி வரவு செலவுத் திட்ட தேவையைக் கருதி பொது திறைசேரியின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டதைப் போன்று ஏதாவது ஒரு சத வீதம் மேல் மாகாண சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

*மத்திய அரசின் முத்திரைக் கட்டணம் மாகாண நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என்பது.*

97ஆ உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால், 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாகாண சபை முத்திரைக் கட்டணங்களை மற்றும் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு இணங்க, அரசினால் முத்திரைக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட எல்லா வருமானமும், அவ்வருமானம் சேகரிக்கப்படும் அடிப்படையின் கீழ் மாகாண சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

4. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

01- 270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.